Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 27-1-1985 ஞாயிற்றுக்கிழமை (இரத்தாக்ஷி தை 14) முழக்கம் 186

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

## மூன்று இளைஞர்கள் சுடப்பட்டு டயர் போட்டு எரிக்கப்பட்டனர்

(திருமலை)

நிலாவெளி பொலிஸ் பகுதியில் மூன்று இளைஞர்கள் நேற்றுக்காலை சீருடையினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட பின்னர், டயர்கள் போட்டு எரிக்கப்பட்டனராம். சீருடையினரைக் கண்டதும் ஓட முயற்சித்ததாகக் கூறப்படும் இவ்விளைஞர்கள் மீது உடனடியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதும் அவர்கள் ஸ்தலத்திலேயே மரணமானர்களாம். சடலங்கள் எரிந்து கொண்டிருந்ததைப் பொதுமக்கள் பார்க்கக் கூடியதாக விருந்ததாகவும், அரைகுறையாக அவை எரிந்திருந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

## பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற சீக்கிய இளைஞர் ராஜீவ், ஜெயில்சிங்கை கொலைசெய்ய முயற்சி

(புதுடில்லி)

பாகிஸ்தான் இராணுவ உளவாளிகள் பிரிவில் போதிய பயிற்சி பெற்ற சீக்கிய இளைஞர்கள் சிலர் புதுடில்லி வந்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியையும், ஜனாதிபதி ஜெயில் சிங்கையும் கொலை செய்யத் திட்டமிட்டிருந்தனர் என்று ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகை பிரத்தியேகச் செய்தியொன்றை வெளியிட்டுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச் செய்தி பற்றி பாரத பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டன. ஆனாலும், பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இருபத்திநான்கு மணிநேரத் துக்கும் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உளவாளிகள் பணியகத்தின் அறிக்கையொன்றை மேற்கோள் காட்டி 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்'' இச் செய்தியைப் பிரசுரித்திருந்தது.

''இந்திரா காந்தியின் குடும்பத்தைப் பூண்டோடு அழிக்கும் வரை தங்கள் பணிமுடியாது'' என்று இந்திரா காந்தி கொலையை அடுத்து சீக்கியத் தலைவர்கள் லண்டனில் அறிவித்தது தெரிந்ததே.

# ஜனாதிபதியின் தூதுவராக 'லலித்' இவ்வாரம் புதுடில்லி செல்கிறார்!

## அமெரிக்காவிலிருந்து புறப்படுமுன்னர் பிரிட்டனுக்கும் இரண்டு தினங்கள் விஜயம்!

(புதுடில்லி)

தற்பொழுது அமெரிக்காவில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இவ்வார இறுதிக்குள் புதுடில்லிக்கு விஜயம் செய்வார். ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் விசேஷ தூதுவராக, பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியை அமைச்சர் அத்துலத் முதலி சந்தித்து இனப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசுவார் என்று புதுடில்லியில் இருந்து வெளி வந்த செய்திகள் நேற்றிரவு தெரிவித்தன.

அமைச்சர் அத்துலத் முதலி அமெரிக்காவிலிருந்துபுதுடில்லி வருவதற்கு முன்னர் இரண்டு தினங்கள் பிரிட்டனுக்கு விஜயம் செய்து அங்கும் அரச மட்டத்தில் முக்கியமான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடக்கூடுமெனவும் தெரியவந்துள்ளது. இதற்கு முன்னோடியாக திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரம வீரசூரியா ஏற்கனவே பிரிட்டன் சென்றுள்ளார்

இம்மாத முற்பகுதியில் பிரதமர் ராஜீவ் காந்தி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடாத்திய சம்பாஷணையின் பெறுபேறாகவே அமைச்சர் அத்துலத்முதலியின் புதுடில்லி விஜயம் இடம்பெறுவதாக

—4-ம் பக்கம் பார்க்க

## குடியேற்ற அமைச்சராக ஜெயவிக்கிரம பெரேரா

(கொழும்பு)

குடியேற்றம், காணிப்பங்கீடு ஆகிய வைகளுக்கென தனியான ஒரு அமைச்சர் அடுத்த சில தினங்களில் நியமனம் செய்யப்படவிருக்கிறார். குருநாகல் மாவட்ட அமைச்சராகப் பணியாற்றும் கட்டுக்கம்பொல தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. காமினிஜெயவிக்கிரமபெரேரா புதிய அமைச்சராக நியமிக்கப்படவாம் என நம்பிக்கையான அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு, கிழக்கு மகாணங்களில் முப்பதினாயிரம் சிங்களக் குடும்பங்களை குடியேற்றுவதென்ற அரசாங்கத்தின் அண்மைய தீர்மானத்தைச் செயல்ப் படுத்தும் பொறுப்பு இப்புதிய அமைச்சிடம் ஒப்படைக்கப்படலாம் எனவும் தெரியவந்துள்ளது.

## வள்ளங்கள் கடத்தல்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை துறைமுக வளவுக்குள் நின்ற இரண்டு வள்ளங்கள் இனம் தெரியாதவர்களால் நேற்றுக் காலை கொள்ளையடித்துச் செல்லப் பட்டதாகப் புகார் செய்யப் பட்டுள்ளது.

## வசாவிளானில் பலர் கைது!

பலாலியில் விமானம் ஒன்றை 'றொக்கட் லேஞ்சர்' மூலம் தாக்க முயற்சித்தது தொடர்பாகச் சீருடையினர் நேற்று வசாவிளானில் பல

—4-ஆம் பக்கம் பார்க்க

## விடுதலையான பதினேழு தமிழக மீனவர்கள் திருமலை கொண்டு செல்லப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பதினேழு தமிழக மீனவர்களும் பலத்த பாதுகாப்புடன் திருகோணமலைக்குக் கொண்டு செல்லபபட்டனர்.

இவர்கள் அங்கிருந்து கப்பலில் ஏற்றப்படடு, தலைமன்னார் கொண்டு செல்லப்படுவார்கள். தலைமன்னாரில் கடற்படையின் பாதுகாபபில் வைக்கப் பட்டிருக்கும் மீன்பிடி வள்ளங்கள் இவர்களிடம் கையளிக்கப் படும்.

நாளை திங்கட்கிழமை நண்பகலுக்கு முன்னர் மீனவர்களும், அவர்களது படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டு இந்திய கடல் எல்லைப்பிரதேசத்துள் விடப் படும் என கொழும்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## யாழ் ஹட்டன் நாஷனல் வங்கியில் 50 லட்சம் ரூபா பெறுமதி நகைகள் பணம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்நகர் பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள ஹட்டன் நாஷனல் வங்கிக் கிளையில் நேற்று முன்தினம் இரவு, ஏறத்தாழ ஐம்பது லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள தங்க நகைகள் கொள்ளையடித்துச் செல்லப் பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பல்வேறு நவீன ஆயுதங்களுடன் துப்பாக்கிகள் சகிதம் ஊரடங்கு வேளையில் வங்கிக்குள் நுழைந்த கோஷ்டி ஒன்று இங்கிருந்த பாதுகாவலர்களை

—4-ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதிக்கு பிரஜைகள் குழு கடிதம்: தமிழர் நிலைமை மிக மோசமடைகின்றது; அணுகு முறையை அரசு மாற்ற வேண்டும்!

தமிழ் பகுதிகளில் ஆயுதப் படையினரின் அடாத்தனம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதென்றும், இவை கட்டுப்பாட்டை மீறிச்செல்வதால் இதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானதாக அமையலாமென அப்பாவிப் பொதுமக்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கும் மகஜரொன்றை தமிழ் பகுதி பிரஜைகள் குழுக்களின் கூட்டுக்குழு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கு அனுப்பி வைத்துள்ளது.

இம் மாதம் 11-ம் திகதி தமது குழு ஜனாதிபதியைச் சந்தித்ததை நினைவூட்டி தயாரிக்கப்பட்ட இம மகஜரில், அதற்குப் பின்னரே நிலைமை மோசமாகி வருவதாகவும் தமிழ் மக்களும் இந்நாட்டின் சாதாரண மக்கள்தான என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் அரச தரப்பினர் பிரச்சினைகளைத் தீர்க்கக் கையாளும் முறை தென்படுகின்றதென்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இம் மாதம் 11-ம் திகதிக்குப் பிறகு தமிழ்ப் பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைப் பட்டியலாகத் தயாரித்து ஜனாதிபதியின் கவனத்திற்குச்

—4-ம் பக்கம் பார்க்க

## ஜெனரேட்டர் கொள்ளை

யாழ்நகரிலுள்ள தனியார் வர்த்தக நிலையமொன்றில விற்பனைக்கிருந்த சில ஜெனரேட்டர், மோட்டர் ஆகியவைகளை ஆயுதம் தாங்கிய இளைஞர் குழுவொன்று நேற்று கொள்ளையடித்துச் சென்றது.

## வல்லைப் பால வீதி மீண்டும் குண்டு வைத்துத் தகர்ப்பு

(அச்சுவேலி)

வல்லை பாலத்தில், யாழ்-பருத்தித்துறை வீதியிலிலுள்ள பாலத்தின் இரண்டு பக்கமும் நேற்று முன்தினம் பிற்பகல் கவச வாகனத்தில் வந்த சீருடையினர் குண்டு வைத்ததால் தகர்க்கப்பட்டது. பாலத்தின் வடக்குப் பகுதி பொங்கலன்று தகர்க்கப்பட்ட பின்னர் இளைஞர்களால் திருத்தியமைக்கப்

—4-ம் பக்கம் பார்க்க

## தொழிற்சாலை தரைமட்டம்; திணைக்களத்தில் கொள்ளை

(புத்தூர்)

அச்சுவேலி வல்லை வீதியிலுள்ள கருப்பஞ்சீனித் தொழிற்சாலையும் நேற்று முன்தினமிரவு இனம் தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இத்தொழிற்சாலைக்கட்டடத்தில் பாதுகாப்புப் படையினர் குடியமரலாம் என்று வெளியான வதந்திகளைத் தொடர்ந்தே கட்டடம் தகர்க்கப்பட்டது. வலிகாமம் கிழக்கு

—4-ம் பக்கம் பார்க்க

# 1982ல் பயிற்சி பெற்ற ஆசிரியைகளுக்கு மூன்று வருடமாகியும் சம்பள உயர்வில்லை!

(சுண்டுக்குளி)

1982ம் ஆண்டு கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறிய பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய விசேட சம்பளம் மூன்று வருடங்களுக்கு மேலாகியும் இன்றுவரையும் வழங்கப்படவில்லை என்று முறையீடு செய்யப்பட்டுள்ளது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் பரீட்சை முடிவுள் ஆசிரியர் பயிற்சிக் கலாசகலை அதிபரால் பல மாதங்களுக்கு முன்னரே அனுப்பி வைக்கப்பட்டு விட்டனவாம்

எனினும் பிரஸ்தாப ஆசிரியர்களுக்குரிய விசேட சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதால் அதிருப்தியும் கவலையும் அடைந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வடமாநிலக் கல்வித் திணைக்களத்துடன தொடர்பு கொண்டு தமது நிலை பற்றிப் புகார்செய்தபோது கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலிருந்து 1982-ம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பற்றிய விபரக் குறிப்புப் பட்டியல் கல்வித் திணைக்களத்துக்கு இதுவரையும் கிடைக்காததே விசேட சம்பளம் இதுவரையும் வழங்கப்படாமல் இருப்பதற்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டது. இது இவ் ஆசிரியர்களுக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமாக கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலை அதிபர் செல்வி சின்னப்புவுடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது பரீட்சைத் திணைக்களம் 1982ம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சையின் முழுமையானதேர்வுப் பட்டியலை அனுப்பி வைக்கவில்லையென்றும், இப்பட்டியல் கிடைத்ததும் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

# வடபகுதி விவசாயிகள் நிலை இவ்வருடமும் தொடர்கதை

(அச்சுவேலி)

வடபகுதி விவசாயிகளின் நிலை கடந்த வருடத்தின் தொடர் கதையாக இந்த வருடம் முடிந்தது. அண்மையில் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் பெருமளவு வெங்காயச் செய்கை பாதிப்படைந்துள்ளது.

அறுவடைக்கு தயாராக இருந்த பிட்டி வெங்காயச் செய்கையிலும் அதை அடுத்து பயிரிடப்பட்ட காலபோக வெங்காயச் செய்கையிலும் பெரும்பகுதி சேதமடைந்துள்ளது. தீவுப்பகுதி வடமராட்சி வலி கிழக்கு பகுதி, வலிமேற்கு பகுதி ஆகிய இடங்களில் பெருமளவு வெங்காயச் செய்கை சேதமடைந்துள்ளது.

உருளைக்கிழங்குச் செய்கை குறிப்பிடத்தக்களவு கடந்த வருடங்களைப்போல பெருமளவு செய்கை பண்ணப்படாத போதிலும் அதிலும் கணிசமான அளவு பாதிப்படைந்துள்ளதாக அறியப்படுகின்றது.

கடந்த வருடங்களிலும் பார்க்க புகையிலைச் செய்கை மிளகாய்ச் செய்கை சிறுதானிய வகை மரவள்ளிக்கிழங்கு மற்றும் உபஉணவுப் பயிர்கள் அதிகமான அளவு பயிரிடப்பட்டுள்ளது காலநிலை மாற்றம் பாட்டால் அப்பயிர்களின வளர்ச்சியும் போதியளவு அமையவில்லை என்றும், பல்வேறு விதமான நோய்களிற்கும் தாக்ததல்களிற்கும் பயிர்வகை உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் கவலையுடன் பேசிக் கொள்கின்றனர்.

## மன்னார் செய்திகள்

மன்னார் பட்டினய உப அலுவலகத்தில் கடமையாற்றிய வி. குணரத்தினம் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைக்கும், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையில் கடமையாற்றிய கதிரித்தம்பி இவரது இடத்திற்கும், அடம்பன் உப அலுவலகத்தில் கடமையாற்றிய சி. திருவிளங்கம் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைக்கும் இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

O O O

திருகேதீஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்கம் மேட்டு நிலப்பயிர்ச்செய்கைக்கு ஊக்கமளிப்பதற்காக ரூபா 35 ஆயிரத்தைச்சங்க அங்கத்தவர் முப்பத்தைந்து பேருக்கு கடனாக வழங்கியுள்ளது மன்னார் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ அருள்வேல் செல்வன் இக்கடனுதவித் தொகையைக் கடந்த வியாழக்கிழமை உரியவர்களுக்கு வழங்கினார்.

O O O

வங்காலை புனித அன்னம்மாள் ஆலய பங்குத் தந்தை அருட்திரு மேரி பஸ்ரியன் கொலை செய்யப்பட்டது தொடர்பாகப் பாரபட்சமற்ற நீதி விசாரணை நடத்துமாறு கோரும் அவசரத் தந்திகளை மன்னார் கத்தோலிக்க பொது நலத்தாபனங்கள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்தனாவிற்கும், தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலிக்கும் அனுப்பிவைத்துள்ளன.

O O O

சுழிபுரம் திரு. பூ. கைலாயநாதன் இம்மாதம் முதல் பொற்கேணி உப அலுவலக ஆயுள்வேத வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நயினாதீவு வி. வேதநாதன் எருக்கலம்பிட்டி உப அலுவலக ஆயுள்வேத வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீணை விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மு. தம்பித்துரை, 71/5, கச்சேரி நல்லூர் ரோட், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

ஆனைக்கோட்டையில் நவாலி ரோட், மானிப்பாய் ரோட் சந்திக்கருகாமையில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: P கனகரத்தினம் 37(71), கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

ஜெனி மேரிஜோசபின் ஜோசப்பின் அடையாள அட்டையும், பென்ஷன் கார்ட்டும் (இல. 8649) யாழ்ப்பாணத்தில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் 'ஈழமுரசு' அலுவலகத்திலோ 16. மருதடி ரோட் யாழ்ப்பாணத்திலோ தயவு செய்து ஒப்படைக்கவும்.




❋ யாழ்- கொழும்புத்துறை வீதி இராமநாதன் அற்றி தம்பதிகளின் மகள் தனுஷா இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ அரியாலை குகன் வீதி சண்முலிங்கம் தனலட்சுமி தம்பதிகளின் புதல்விகள் ஊர்மினி பாமினி இன்று தமது பதினேராவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்கள்.

❋ காரைநகர் கேசகமூர்த்தி யோகாம்பிகை தம்பதிகளின் மகன் நிஷாந்தன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ ஓமந்தை சுப்பிரமணியம் மூக்காய் தம்பதிகளின் மகன் சாந்தகுமார் இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ நீர்வேலி தில்லைநாதர் தம்பதிகளின் மகள் கௌசலா இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாகிறார்.

❋ யாழ்-வண்ணை கதிரேசன் கோவில், நாராயணக்குருக்கள் தம்பதிகளின் மகன் கிருஷ்ண மோகன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ மானிப்பாய் தர்மசிலன் றஞ்சனி தம்பதிகளின் மகள் றெனி வக்சோல் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## வேலணை வாசியின் சடலம்

யாழ். தபால் நிலையத்துக்கு முன்புகிடந்தசடலம், வேலணை மண்கும்பானைச் சேர்ந்த கோ. சண்முகலிங்கம் என்பவரது என அவரது உறவினர்களால் யாழ் பெரியாஸ்பத்திரி சவச்சாலையில் அடையாளம் காட்டப்பட்டது. யாழ் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் விசாரணை நடத்தினார். உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

# பனம் உற்பத்திப் பொருட்களுக்கென ஏற்றுமதி உற்பத்திக் கிராமக் கம்பனி

(உடுப்பிட்டி)

''பனம் உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. அதனால் வடமராட்சிப் பகுதி மக்கள் இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்த ஏற்றுமதி உற்பத்திக் கிராமக் கம்பனி மூலம் உற்பத்திகளை ஏற்றுமதி செய்து அதிக வருவாயைப்பெற்றுக் கொள்ள முடியும்.''

இவ்வாறு கூட்டுறவு உதவி ஆணையாளரும் பருத்தித் துறை-புலோலி ஏற்றுமதி உற்பத்தி கம்பனி முகாமைத்துவ அதிபருமான திரு. எஸ் வேலாயுதபிள்ளை இக்கம்பனி திறப்பு விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், இப்பகுதியில் பல குடும்பங்கள் பனை மூலவளத்தை நம்பி வாழ்ந்து வருகின்றன. இப்பகுதிகளில் பனம் கைத்தொழிலை குடிசைக்கைத் தொழிலாகமேற்கொள்ள முடியும் இதில் ஈடுபடுவோருக்கு இக்கம்பனி உபகரணங்களை பனம் பொருள் கூட்டுறவுச்சங்கம் மூலம் விநியோகம் செய்யமுடியும் இத்தொழிலுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும் என்றார்.

புலோலி பனம் பொருள் கூட்டுறவுச்சங்க முன்னாள் தலைவர் தி. சோ. சிவராசாவினால் திறந்துவைக்கப்பட்ட இவ்விழாவை பருத்தித்துறை பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு கி சிவப்பிரகாசம், கட்டைவேலி தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.செ. தங்கராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றினர். முகாமையாளர் திரு. ஜே எஸ் சத்தியநாதன் நன்றி கூறினார்.

## மன்னாருக்கு கடுகதி ரயில்

(மன்னார்)

இருபது நாள் இடைவெளிக்குப்பின் கொழும்பிலிருந்து தலைமன்னாருக்கு கடுகதி ரயில் சேவை கடந்த சனியன்று நடத்தப்பட்டது.

கொழும்புக்கும் தலைமன்னாருக்குமிடையில் வாரத்தில் மூன்று நாட்கள் நடைபெற்று வந்த கடுகதி ரயில் சேவை கடந்த மாதம் 29ஆம் திகதி முதல் பாதுகாப்புக்கருதி இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## திருமதி நாஜினா ராஜ்ய சபா துணைத் தலைவர்

இந்திரா காங்கிரசைச் சேர்ந்த திருமதி நாஜினா ஜெஸ்துல்லா இந்திய ராஜ்ய சபாவின் துணைத் தலைவராக நேற்றுத் தெரிவானார். பாராளுமன்ற விவகார இணையமைச்சர் திருமதி மார்க்கிரட் ஆல்வாவினால் முன்மொழியப்பட்டு பகத்ராம் மனோகரால் வழிமொழியப்பட்ட இவரைத் தவிர வேறு யாரும் துணைத் தலைவர் பதவிக்கு போட்டியிடவில்லை.

# 1983 ஜூலை அகதிகளுக்கு 40 வீடுகள் கையளிப்பு

(நல்லூர்)

அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தினால் இயக்கச்சியில் கொள்முதல் செய்து வழங்கப்பட்ட காணியில் யாழ் வை. எம். சீ. ஏ. ஸ்தாபனத்தினால் கட்டி முடிக்கப்பட்ட முப்பது வீடுகள் 1983-ம் ஆண்டு வகுப்புக் கலவரத்தால் தென்னிலங்கையிலிருந்து பாதிக்கப்பட்டு வடக்குக்கு அகதிகளாக வந்த முப்பது குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இன்னும் தொடர்ந்து கட்டப்பட்டு வரும் சுமார் 40 வீடுகளுக்குக் குடியிருப்பாளர்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை அகதிகள் புனர்வாழ்வு நிதியம் மேற்கொண்டு வருகிறது.

குடியிருப்பதற்கு வீடுகள் அமைக்கப்படும் பகுதிக்கு அகதிகள் புனர்வாழ்வு நிதியத் தலைவரும், முன்னாள் மேலதிக அரசாங்க அதிபருமான திரு. ஜே. எம். சபாரத்தினமும், யாழ். வை. எம். சீ. ஏ. ஸ்தாபனத் தலைவர் திரு. எம். சி. பிரான்சிஸ்சும், திரு. எம். தம்பித்துரையும் சென்று பார்வையிட்டனர்.

## பாராளுமன்றம் பெப். 20ல்

பாராளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடர் நேற்றுடன் முடிவடைந்தது, அடுத்த கூட்டத் தொடரை பெப்ரவரி மாதம் இருபதாம் திகதி ஜனாதிபதி திரு ஜே.ஆர். ஜெயவர்த்தனா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

மாதாந்தம் 36% வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்

30-01-85 வரை

36% அதீத வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

# சிலரது மதவெறியால் பல்லாயிரம் மக்கள் இன்னல்; நாட்டின் வளர்ச்சியும் மிகவும் பாதிப்பு

பாரதத்தின்முப்பத்தாறுவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்திய ஜனாதிபதி ஜெயில்சிங் நேற்று நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் நிகழ்த்திய உரையின் தமிழாக்கம்:-

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னால் எங்கள் தேச பிதாக்களால் அமுல் செய்யப்பட்ட அரசியல் நிர்ணயச்சட்டம் சோசலிச, ஜனநாயக தன்மைகளைப் பெற்றிருந்தது. அது தனது அடிப்படையாகவும் ஆத்மார்த்தமாகவும் நீதி, சமூக பொருளாதார அரசியல் வளர்ச்சி, சிந்தனை, தொழுகை, வெளியீட்டுச் சுதந்திரம், சமத்துவம், சமவாய்ப்பு என்பவற்றை எல்லோருக்குமாக வழங்குவதாயிருந்தது. இன்றைய நிலையில் இதன் அம்சங்களில் பரவலாகவும் அரசியல் ரீதியில் சிறப்பாகவும் முன்னேறியிருக்கிறோம். ஆனால் பொருளாதார சமூக ரீதியிலும் சமத்துவ, சம வாய்ப்புகளை, வழங்குவதிலும் செய்ய வேண்டியது எவ்வளவோ உள்ளன.

இவற்றைச் செய்ய பொருளாதார வளர்ச்சி மிகத்தேவையானது. அது மட்டுமன்றி அவ் வளர்ச்சியின் பயன்கள் இந்நாட்டின் பாமர நலிந்த மக்களைச் சென்றடைய வேண்டுமென்பதும் முக்கியமாகும். இவர்களுக்கு அரசியல் சட்டம் சில உரிமைகளையும் கடமைகளையும் வழங்கியுள்ளது அவர்கள் தமது உரிமைகளில் உறுதியாக நிற்கும் அதேவேளை கடமைகளையும் கருத்தூன்றிச் செய்யவேண்டும்



சென்ற வருடம் நமது நாட்டுக்கும் அரசுக்கும் சோதனை மிக்க ஒரு காலமாக அமைந்து விட்டது. வன்முறைகள் வளர்ந்து அவற்றின் உச்ச நிலையாக நமது அபிமானத்துக்குரிய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள், இந்த நூற்றுண்டின் சிறந்த இந்தியத் தலைவராக மட்டுமன்றி எல்லாக் காலத்திற்கும் சிறந்த ராஜதந்திரியான அவரது அகாலமரணம் நமது தேசத்திற்கேற்பட்ட பேரிழப்பாகும். இத்தகைய பேரிழப்பின் நெருக்கடியிலும் நமது அரசியல் யாப்பு மாற்றமின்றி நிலைத்ததோடு நமது பார்வைகளும் நோக்கங்களும் மாருதிருந்தன.

கடந்த வருடம் முடிந்தபோது நம்பிக்கையைத் தந்திருக்கிறது எட்டாவது லோக்சபாத் தேர்தல் அமைதியாக நடந்து முடிந்ததன் மூலம் நமது ஜனநாயக பாரம்பரியமும் முதிர்ச்சியும் பலப்படுத்தப்பட்டுள்ளன. நாம் பல தரப்பட்ட கலாச்சார வழிமுறைகள், சகிப்புத்தன்மை, மரியாதை, அமைதியான ஜனநாயக வாழ்க்கை என்பவற்றைக் கொண்டவர்கள் இந்த மண்ணிலேயே மானிட சமுதாயம் அத்தனைக்கும் 'நல்வாழ்வு' என்ற கருத்தைக் கொண்ட ''சர்வே ஜனகா சுகினே பவந்து'' என்ற தத்துவம் முழங்கப்பட்டுள்ளது. நமது தேசத்தின் பெருமை பல்வேறு கலாச்சாரங்களின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை மிக்க இணைப்பால் ஏற்பட்டது. இதில் நாமும் இணைந்து நமது பங்கைச் செலுத்துவோம்;

மத, இன, மொழி நிற வேறுபாடுகளின்றி நாமனைவரும் இந்த நாட்டின் சொந்தக்காரர்கள். ஆன்மீகத்தை வளர்க்கும் மதங்கள் வளரும் இன்றைய நாகரிக சமுதாயத்தில் அவற்றின்பேரால் வகுப்பு வாதங்களும் தூண்டப்படுகின்றன. மதவெறியானது மதங்களின் மதிப்பையும் புனிதத்தையும் குலைக்கிறது. நாளைய சமுதாயமான இளைஞர்களும் இதனால் ஈர்க்கப்பட்டுள்ளார்கள் என்பது கவலை தரும் விடயமாகும். சிலரது மத வெறியால் பல ஆயிரக்கணக்கான மக்கள் இன்னல்படுவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப் படுகிறது.

அமைதி, கூட்டுச்சேராமை என்ற அடிப்படைகளைக் கொண்ட நமது வெளியுறவுக் கொள்கை உலகில் மிக்க மரியாதை செய்யப்படுவதோடு நமது கருத்துக்களும் நன்மதிப்பைப் பெற்றுள்ளன. அணிசேரா இயக்கத்தின் தலைவரான நாம் அணு ஆயுதங்களின் அச்சுறுத்தலை உணர்ந்து ஆயுதக் குறைப்புக்கு கூட்டாக வேண்டுகோள் விடுக்க ஆறு நாடுகளின் உச்சிமகாநாடு ஒன்றுக்கு முயன்று வருகிறோம் இதே நேரம் அமெரிக்க சோவியத் வல்லரசுகளும் மனித குலத்துக்கு அணு ஆயுதம் விளைவிக்கும் ஆபத்தையுணர்ந்து ஆயுதக் குறைப்புப் பற்றிக் கூடிப் பேச முடிவெடுத்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

நாட்டின் பாதுகாப்பினை ஆழ்ந்த ஈடுபாட்டோடு பேணி வரும் இராணுவ காவல் படைகளை பல தடவை சந்தித்திருக்கிறேன். நமது தரை, கடல் விமானப்படைகள் நாட்டுக்கு வரும் எந்த அச்சுறுத்தலையும் எதிர் கொள்ளுமளவு விழிப போடுள்ளன அந்த வகையில் அவை தேசத்தின் பாராட்டுதலுக்குரியனவாகின்றன.

பல நூற்றுண்டுகளாக நாம் அகிம்சையைப் பேணி வருகிறோம் அமைதியை போதித்த ஞானியர் வாழ்ந்த நாட்டில் வன்முறைகள் தேவையற்றன எந்த வேறுபாடுகளும் இல்லாத பரஸ்பர அன்பும் கூட்டுறவும் மிக்க சூழ்நிலையை உருவாக்குங்கள். வறுமையின் கொடுமை, அறியாமை இருண்ட சூழ்நிலை, நோய் இவற்றை எதிர்த்து விரட்ட நமது எல்லா ஆற்றல்களும் ஒட்டு மொத்தமாக பயன்பட்டும் என எல்லாக் குடி மக்களுக்கும் சொல்ல விரும்புகிறேன்.

★ ஒரு கடிதம்

## தானங்களில் சிறந்தது இரத்ததானம் தாராள உதவி உயிர்களைக் காப்பாற்றும்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு இரத்த தானம் செய்பவர்கள் தொகை குறைந்து வருவதால், ஆஸ்பத்திரி இரத்தவங்கி ''வரட்சி நிலை''க்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும், அவசர நோயாளிகள் மரணத்தை எதிர் நோக்கும் நிலைக்கு ஆளாகிறார்கள் என்றும் யாழ். ஆஸ்பத்திரி அத்தியட்சகர் டாக்டர் நச்சினார்க்கினியர் கடந்த புதன்கிழமை பத்திரிகை வாயிலாக அறிவித்திருந்தார்.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையின் காரணமாக, அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுவோர் தொகை மிக வேகமாக அதிகரித்து வருவதால், அவர்களைக் காப்பாற்ற தாராள சிந்தையாளர்கள் இரத்த தானம் செய்ய முன் வரவேண்டும் என்று வேண்டுகோளும் விடுத்திருந்தார்.

இதேவேளையில், இன்றைய நிலை அறிந்து யாழ். மத்திய கல்லூரி உயர் வகுப்பு மாணவர்களும், பத்தாம் வகுப்பு மாணவர்களுமாக சுமார் இருபத்தைந்து பேர் கடந்த செவ்வாய்க்கிழமை இரத்த தானம் செய்திருக்கிறார்கள். எமது மக்களுக்கு இவர்கள் ஒரு முன் மாதிரியாக நடந்து காட்டியுள்ளார்கள். இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களாகிறார்கள்.

யாழ்ப்பாண இரத்த வங்கியின் வரட்சி நிலையைப்போக்க மதகுருமார், பெரியோர்கள், அதிகாரிகள் மற்றும் பொது ஸ்தாபனங்களின் தலைவர்கள் தங்களாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும், பிரசங்கங்கள், கூட்டங்கள், கருத்தரங்குகளின் போது மக்களுக்கு இது சம்பந்தமான விளக்கங்கள், அறிவுரைகளை வழங்கி, அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

பல்கலைக் கழக மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரிமாணவர்கள் இரத்த தானம் செய்து முன்மாதிரி காட்டுவதோடு, பிரசுரங்கள் சுவரொட்டிகள் மூலம் பிரசாரமும் செய்யலாம்.

பொது நல ஸ்தாபனங்கள் சினிமா சிலைட், பத்திரிகை விளம்பரம், பொது மக்கள் கூடும் இடங்களில் பதாகைகள் வைத்தல் போன்ற வகையில் தமது பணியைச் செய்யலாம். எமது மக்கள் இதற்கு தமது முழு ஒத்துழைப்பையும் நல்குவார்கள் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

● எம் பேரின்பநாயகம்

## கும்பாபிஷேகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் வடகிழக்கிலுள்ள ஆனந்த வைரவர் ஆலய வருடாந்த கும்பாபிஷேகம் இன்று காலை எட்டு மணிக்கு நடைபெறவுள்ளது. அத்துடன் மகேஸ்வர பூசையும் இடம் பெறும்

## மண்டைதீவில் மரம்நாட்டும் இயக்கம்

(சுண்டுக்குளி)

அதிக மரம் நாட்டுந் திட்டத்தின் கீழ் மண்டைதீவில் மரம் நாட்டும இயக்கம மேற்கொள்ளப்படவுள்ளது. இங்குள்ள சகல பாடசாலை வளவுகளிலும், வைத்தியசாலை, பொதுஸ்தாபனங்களின் வளவுகளிலும், தரிசு நிலங்களிலும் மரம் நாட்டும் இயக்கம் மேற்கொள்ளப்படும். மண்டைதீவு கிராம அபிவிருத்திச்சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மில்க்வைற் அதிபர் 'சிவதர்ம வள்ளல்' க. கனகராஜா அவர்கள் மரம் நாட்டும் வைபவத்தை ஆரம்பித்து வைப்பார்.

## அமெரிக்க விண்கலத்தின் இரகசிய இராணுவ உளவு பயணம் ஆரம்பமாகியது

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் 'டிஸ்கவரி' என்ற விண்வெளிக் கலத்தின் ரகசிய இராணுவப் பயணம் நேற்று முன்தினம் தொடங்கியது.

இக்கலத்தில் ஐந்து இராணுவ வீரர்கள் உள்ளனர். இவர்கள் செற்கைக்கோள் மூலம் சோவியத் யூனியனின் விண்வெளி ஏவுகணை முதலான செயற்பாடுகளை அவதானித்து வேவு நடவடிக்கையினை மேற்கொள்வர் என்று வாஷிங்டன் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

★ மூன்று கடிதங்கள்

## பாடசாலையில் மதப்பூசல் சமாதானத் தீர்வு இல்லை

பாடசாலையில் மதப்பூசல்; ஒரு பகுதியினர் பாதிப்பு என்ற தலைப்பில் நவாலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய செய்தியொன்றை இம் மாதம் 17ம் திகதி பிரசுரித்திருந்தோம்.

இப்பிரச்சினையை நவாலி தெற்கு சமாதான சபை சமாதானமகாத் தீர்த்துவிட்டதாக சபையின் அமைப்புச் செயலாளர் ந. யோகநாதன் விடுத்திருந்த அறிக்கை நேற்றைய ஈழமுரசில் வெளியாகியிருந்தது

பாடசாலை அதிபர் உட்பட மூவரிடமிருந்து இது தொடர்பான கடிதங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இவைகளை இங்கு பிரசுரம் செய்கின்றோம்.

★ பாடசாலை அதிபரின் கடிதம்:

நவாலி சென் பீற்றேஸ் றோ. க த. க. பாடசாலையில் 1-1-85ல் நடைபெற்ற துர்ப்பாக்கிய அசம்பாவித சம்பவத்தை இட்டு தங்கள் ஈழமுரசு நாளிதழில் 17-1-85ல் வெளியான செய்தி முற்றிலும் நடந்த சம்பவமாகும். அது விடயமாய் அதிபர் என்ற முறையில் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டுள்ளேன் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி அவர்கள் 9-1-85 11-1-85 ஆகிய திகதிகளில் எமது பாடசாலைக்கு விசாரணை மேற்கொண்டு அதிபர், ஆசிரியர் இந்துமதப் பெற்றோர், கத்தோலிக்க மதப் பெற்றோர் ஆகியோரை விசாரணை செய்துள்ளார் விசாரணையின் முடிவு இதுவரை கல்வித் திணைக்களத்தால் எமக்குக்கிடைக்கவில்லை இதுவி யமாய் இந்து, கத்தோலிக்க பெற்றோருக்கிடையில் எந்தவிதமான உடன்பாடோ சமாதானமோ ஒற்றுமையோ பூரணமாய் ஏற்படவில்லை. விசாரணை முடிவுவரையனும் எந்த விதமான அறிக்கையையும் பிரசுரத்திற்குத் தரமுடியாத நிலையில் இருக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி.

❋ நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபை செயலாளர் செ. மகேந்திரன் எழுதியது :-

நவாலி றோ. க. தமிழ்க் கலவன் பாடசாலையில் மதப்பூசல் ஒரு பகுதியினர் பாதிப்பு என்ற தலைப்புடன் 17-1-85ல் வெளிவந்த செய்தி உண்மையான தொன்றும் இது விடயமாக இந்துப் பெற்றோர் யாழ். கல்விப் பணிப்பாளர்க்கு அனுப்பிய மகஜரின் முதல் நடவடிக்கையாக வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன் இரு தடவைகள் விசாரணை செய்து சென்றுள்ளார். இவ்விடயத்தை நவாலி சமாதான சபை தீர்த்து வைக்கவில்லை என்பதனை உறுதியாக கூறி வைக்க விரும்புகின்றோம்.

❋ நவாலி தெற்கு முருகானந்த சனசமூக நிலையத்தலைவர் செ. சிவபாதம் எழுதிய கடிதம் இது .-

றோ. க. த. க பாடசாலையில் அண்மையில் ஏற்பட்ட சம்பவத்தை தங்கள் பத்திரிகையில் 17-1-85ல் பிரசுரித்ததன் மூலம் மேலதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் கவனமெடுத்து விசாரணைகள் மேற்கொண்டு உள்ளார்கள் இவ்வரிய சேவைக்காக எமது நிலையத்தின் சார்பில் நன்றி கூறுகின்றேன்.

ஈழமுரசு

## கூட்டுறவுச் சங்கக் கிளையின் சகல பொருட்களும் கொள்ளை

(கிளிநொச்சி)

கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கனகாம்பிகைக் கிளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொள்ளையைத் தொடர்ந்து மேற்படி சங்கக்கிளை தொடர்ந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இங்கிருந்த மண்ணெண்ணெய் பரல்களைத் தவிர மற்ற எல்லாப் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இருபத்திரண்டாயிரம் ரூபா பெறுமதியான அரிசி, மா, சீனி, மைசூர் பருப்பு, சவர்க்காரம், அலுமினியப் பாத்திரங்கள், ஆகியவையுடன் ஐயாயிரம் ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளுமே கொள்ளையடிக்கப்பட்டவையாகும். காவலாளியான பொ. சுப்பையாவை ஒரு அறையுள் கட்டிவைத்து விட்டு சங்கக் கதவை உடைத்துக் கொண்டு சென்ற ஆயுதபாணிகளான ஐந்து இளைஞர்களே இக்கொள்ளையை மேற்கொண்டுள்ளார்கள்

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முடிவு:

# மண்டை தீவு, யாழ்-பண்ணை ஒலிபரப்பு நிலையங்கள் நிரந்தரமாக மூடப்படும்!

(கொழும்பு)

மண்டைதீவில அமைக்கப்பட்ட ஒலிபரப்பு நிலையத்தையும், பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்யும் "ஸ்ரூடியோ" நிலையத்தையும் நிரந்தரமாகவே மூடிவிடுவதென்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தீர்மானம் எடுத்துள்ளது. இவைகளுக்குப் பதிலாக மாங்குளத்தில் அல்லது வவுனியாவில அமைக்கப்படவிருந்த ஒலிபரப்பு நிலைய வேலைகளைக் கால வரையின்றி ஒத்திவைப்பதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு, பண்ணை ஒலிபரப்பு நிலையங்களை மீண்டும் திறப்பதில்லையென்பதால் இக்கட்டடங்களை வேறு அரசாங்க வேலைகளுக்குப் பயன்படுத்த வழங்குவதென்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது. இதன் பிரகாரம் இக்கட்டடங்களை அரச தேவைகளுக்குப் பயன் படுத்தும் அதிகாரத்தை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு வழங்க ராஜாங்க அமைச்சு இணங்கியுள்ளது.

இவ்விரு கட்டடங்களையும் பாதுகாப்புப் படையினரின் வேலைகளுக்கென வழங்க முன்னர் ஆலோசிக்கப்பட்ட போதிலும், இப்போது அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் முடிவிற்கிணங்க மண்டைதீவுக் கட்டடத்தை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்துக்கு வழங்க யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் முடிவுசெய்துள்ளார்

நாவற்குழியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டதால் அலுவலகத்தை இழந்திருக்கும் நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளருக்குபண்ணைக் கட்டடத்தை வழங்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## தோலகட்டி நிறுவனரின் நினைவுதினம்

ஆசியக் கண்டத்திலேயே முதற் தியான யோக சபையை ஏற்படுத்த இறைவன் தேர்ந்த கருவி தவத்திரு பி.ஏ தோமஸ் அடிகளாகும். இவர் 1928ம் ஆண்டுமாசித்திங்கள் 2ம் நாள் யாழ். மறை மாவட்டத்தில் ஆயரின்விருப்பிற்கு இணங்கி தோலகட்டி எனுமிடத்தில் செபமாலைத்தாசர் சபையை நிறுவினார்.

1886ம் ஆண்டு பங்குனித் திங்கள் 7ம் நாள் யாழ் பாண்டியன்தாழ்வு என்ற இடத்தில் பிறந்த இவர் இவ்வுலகில் இறைவனின் பணியை இனிதே முடித்து 1964ம் ஆண்டு தைத் திங்கள் 26ம் நாள் இறைபதம் அடைந்தார். அவரது 21வது ஆண்டு நினைவு தினம் அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கும் செபமாலைத் தாசரின் தாய் மடமாம் தோலகட்டியிலும், இந்திய இலங்கை கிளை மடங்களிலும், கன்னியர் மடங்களிலும், யாழ் புனித மரியாள் பேராலயம்,பாண்டியன்தாழ்வு, நாரந்தனை, பருத்தித்துறை. இன்னும் பல ஆலயங்களிலும் நேற்று சனிக்கிழமை இரங்கற் திருப்பலிகளுடன் நினைவு கூரப்பட்டது.

## 18 லட்சம் நகைகள் இளைஞர் குழுவால் மீட்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளையில் வான் ஒன்றில் வந்த சுமார் பதினைந்து பேரடங்கிய ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டியொன்று நான்கு வீடுகளில நள்ளிரவுவேளையில் சுமார் பதினெட்டு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகளையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் வேளையிலேயே இக்கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இப்பரபரப்பூட்டும் சம்பவங்கள் இரண்டு நகைக்கடை உரிமையாளர்கள் வீட்டிலும் இரண்டு இளைப்பாறிய ஆசிரியர்கள் வீட்டிலுமே நடைபெற்றுள்ளன. இளைப்பாறிய ஆசிரியர்கள் வீடுகளுக்குள் புகுந்து கொண்ட ஆயுதப்பாணி இளைஞர் கோஷ்டியினர் துப்பாக்கி முனையில் அங்கிருந்த தங்க நகைகளையும், ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்தனராம்.

நகைக்கடை உரிமையாளர்கள் வீட்டிற்குள் புகுந்து கொண்ட இக் கோஷ்டியினர் இவர்களின் மகன்மாரைக் கடத்திச் சென்று பயமுறுத்தி கொள்ளையடித்த பின்னர் அவர்களை விடடுச் சென்றனராம்.

### ஜனாதிபதி...

1-ம் பக்கத் தொடர்

பி.ரி.ஐ செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது இச்சந்திப்புக்களில் பாரத வெளியுறவுக் கொள்கைத் திட்டமிடல் குழுத் தலைவர் திரு ஜீ. பார்த்தசாரதியும் முக்கிய பங்கு வகிப்பார்.

அமைச்சர் அதுலத் முதலி அமெரிக்காவில் இருந்து புறப்படுவதற்கு முன்னர் உப-ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ், ராஜாங்க அமைச்சர் திரு ஜோர்ஜ் சூல்டஸ் உட்பட சில முக்கிய அரச உயாமட்டப் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஜனாதிபதியின் விசேஷதூதுவர் ஒருவர்விரைவில்புதுடில்லிசெல்வார்என்ற செய்தியைஈழமுரசு நேற்றே வெளியிட்டிருந்தது

### தொழிற் சாலை...

—1-ம் பக்கத் தொடர்

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் இத்தொழிற் சாலையை நடத்தி வந்தது.

அதேவேளையில் புத்தூர் நிலாவரை வீதியிலுள்ள பெருந்தெருக்கள் திணைக்கள அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் பகல் ஒரு மணியளவில் கூட்டுறவுச் சங்க லொறியொன்றில வந்த இளைஞர்கள் அங்கிருந்த வாகன உதிரிப்பாகங்கள், தட்டச்சு, றோனியோ மெஷின் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

### யாழ் ஹட்டன் . . .

—1ம் பக்கத் தொடர்

ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டு இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது

சுமார் இருநூறுக்கும் அதிகமான பாதுகாப்பு லொக்கர்கள் அதற்குள் இருந்த நகைகளுடன் சொத்து கொள்ளையடிக்கப்பட்டதாகவும் வங்கியின் இருப்பில இருந்த சுமார் ஐம்பதுனாயிரம ரூபா பணமும் கொள்ளையரால் எடுத்துச் செல்லப்பட்டதாகவும தெரிய வந்துளளது.

கொள்ளையடிக்கப்பட்ட வங்கியில் பாதுகாப்பில வைக்கப் படடிருந்தவேளையில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளுள் யாழ். நகரிலுள்ள பிரபல்யமான இரண்டு இந்து ஆலயங்களுக்குச் சொந்தமான நகைகளும் இருந்தனவாம. கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெறுமதி பற்றிய சரியான மதிப்பீடு ஓரிரு தினங்களில் மேற்கொள்ளப்படுமென பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிள் தீயிடப்பட்டது

(அரியாலை)

நேற்றுக்காலை அரியாலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. வாகனங்களில் சீருடையினர் வருவதைக் கண்டதும் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள், போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். அவர்களைத் துரத்திச் சென்ற சீருடையினர் திரும்பி வந்து வீதியில் கிடந்த சைக்கிளை எரித்தனராம். சீருடையினர் சென்றதும் இளைஞர்களே திரும்பியும அதை எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது

## அண்ணா வீரப்பதக்கம்

(சென்னை)

கடந்த ஆண்டுக்கான அண்ணா வீரப்பதக்கம் வீரச் செயல் புரிந்த மூவருக்கு வழங்கப்படவுள்ளது. ஆயிரம் ரூபா பெறுமதியான பதக்கமும் ஆயிரம் ரூபா காசோலையும் இவர்களது குடும்பங்களுக்குத் தமிழக அரசு சார்பில் வழங்கப்படும்.

### வசாவிளானில்...

— 1ம் பக்கத் தொடர்

ரைக் கைது செய்தனர். இங்குள்ள கல்லுடைக்கும் தொழிற் சாலையொன்றின் லொறியில, கோழிப் பண்ணையொன்றில் வேலை செய்த ஐவரை இவர்கள் கைது செய்து கொண்டு சென்றதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

### வல்லைப் பாலம்...

—1-ம் பக்கத் தொடர்

பட்டது தெரிந்ததே.

பாலத்தின் வடபகுதி புதிதாகத் தகர்ந்து அதில் சிறிய மதவு உட்பட எழுபத்தைந்து அடி தூரம் சேதப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணி முதல் ஆறுமணி வரை தங்கி நின்று சீருடையினர் இதனைச் செய்தபோது அருகேயுள்ள பொதுமககள் பார்க்கக் கூடியதாக இருந்தது

அதேவேளை, நேற்று முன் தினம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட வல்லை கூட்டுறவு ஆஸ்பத்திரி வளவுக்குள்ளிருந்த நான்கு வீடுகளும் நேற்று முன்தினமிரவு இனம் தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

### தமிழர்...

1-ம் பக்கத் தொடர்

சமர்ப்பித்துள்ள பிரஜைகள் குழுக்களின் கூட்டுக்குழு சரியான நடவடிக்கையை எடுப்பதில் ஒரு நாள் தவறினாலும் பிரச்சினை அதிகரிக்குமெனவும் சரியான அணுகுமுறையில் நிதானமாக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளனர்.

## ஊர்காவற்றுறை பிரஜைகள்குழு நிதிசேகரிப்பு

முல்லைத்தீவு அகதிகளுக்கு உதவுவதற்காக ஊர்காவற்றுறை வர்த்தகர்களிடம் சேகரித்த ரூபா ஐயாயிரத்தையும் ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுவினர் அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்திடம் கையளித்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள பல்வேறு கிராமங்களிலும இந்த அகதிகளுக்கு உதவுவதற்கென பிரஜைகள் குழுவினா தொடாந்து பொருட்களைச்சேகரித்து வருகின்றனர்.

## மீனவருக்கு நிவாரணம்

(குருநகர்)

கடல் வலயத்தால் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் மீனவக குடும்பங்களுக்கு நிவாரணமாக அங்கத்தவர் ஒருவருக்கு இருபது ரூபா வீதமும, மண்ணெண்ணெய்க்கு பதினைந்து ரூபா வீதமும அடங்கிய உணவு முத்திரைகள் விநியோகிக்கப் படடு வருகிறது.

இதன பிரகாரம் ஏற்கனவே உணவு முத்திரைகள் இல்லாதவர்களுக்கு ஒரு அங்கத்தவருக்கு முப்பது ரூபாவும், மண்ணெண்ணெய முத்திரையும் வழஙகப்பட இருப்பதாகவும் தெரியவருகின்றன.

சீன அமைச்சர் கருத்து

## இலங்கையின் இனப் பிரச்சினை

(கொழும்பு)

இலங்கையில் இனப் பிரச்சினையை பேச்சு வார்த்தையின் மூலம் தீர்த்து வைக்க முடியும் என்று இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்ப முன்னர் சீன வெளிவிவகாரமைச்சர் திரு. வூ ஷூ குவான் செய்தியாளர்களிடம தெரிவித்தார்.

சீனாவில் ஐம்பதுக்கும் அதிகமான இனமக்கள் வாழ்கிறார்கள். ஆனால அனைவரும சரிசமமாக நடத்தப்படுகிறார்கள். எந்த இனத்தவர்களும் கூடுதலாகவோ, குறைவாகவோ அங்கு கணிக்கப்படுவதில்லை என்றும் அமைச்சா குறிப்பிட்டார்.

இலங்கையில் வாழும் மக்களிடையே சமாதானமும், பரஸ்பர நம்பிக்கையும ஏற்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கை அரசாங்கம் சுமூகமான பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டும் எனறும கேட்டுக்கொண்டார். தான இலங்கையில் தங்கியிருந்த சமயம் ஆயுதங்கள் பற்றியோ, யுத்த உபகரணங்கள் பற்றியோ எவருடனும் பேசவில்லை, எனவும் அவர் குறிப்பிட்டுச் சொன்னார்.

## சிரமதானம்

(சுண்டுகுளி)

சீர் கேடான நிலையிலிருக்கும் மண்டைதீவு அபசினா ஆஸ்பத்திரி வீதி சிரமதானம மூலம் திருத்தப் புனரமைக்கப்படவுள்ளது மண்டைதீவு கிராம அபிவிருத்திச்சங்கம் பொது மக்களின் உதவியுடன் இச்சிரமதான இயக்கத்தை மேற் கொள்ளவுள்ளது.

யாழ்நகரில் — முதன் முறையாக

SPECIAL ENGLISH COURSE

4 மாதத் தீவிரப் பயிற்சி

ஆசிரியர் திரு. T. N. பஞ்சாட்சரம்

" R. சபாநாயகம்

ஆரம்பம் 2-2 85

இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்

வினா - விடைப் பயிற்சிகள்

விபரங்களுக்கு : நேரில் / தபாலில்

ASTAN INSTITUTE

166/1 HOSPITAL ROAD - JAFFNA

'ஈழமுரசு' சாயப்பா அடவாடைசிங அச்சக வேதஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 27-1-85 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.